**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை –06.**

**ந.க.எண்.: 031456/எம்1/இ1/மன்றச் செயல்பாடுகள்/2026, நாள்: .07.2026**

**பொருள் :** பள்ளிக் கல்வி – 2026–27 – மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சி – மாணவர்களிடையே மன்றச் செயல்பாடுகள் குறித்து விழிப்புணர்வு – சார்ந்து.

******

மாணவர்களின் கல்வி மற்றும் தனித்திறன் மேம்பாட்டில் மன்றச் செயல்பாடுகள் பெரும் பங்கு வகிக்கின்றன. மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வெளிக்கொணரவும், அவர்களின் பன்முக வளர்ச்சியை உறுதி செய்யவும் இந்த மன்றச் செயல்பாடுகள் ஒரு அடிப்படை தளமாக விளங்குகின்றன.

அதன்படி, மன்றச் செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அரசுப் பள்ளிகளில் 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை இதற்கென தனி பாடவேளை ஒதுக்கீடு செய்யப்பட்டு இச்செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இம்மன்றச் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளில் வேறு எந்தவித செயல்பாடுகளுக்கும் இடமளிக்காமல், இச்செயல்பாடுகள் அனைத்தும் மகிழ்முற்றம் மாணவர் குழுக்கள் வாயிலாக நடைபெறுவதை உறுதி செய்தல் வேண்டும்.

மேலும், இந்த 2026–27 ஆம் கல்வியாண்டில், மன்றச் செயல்பாடுகளின் துவக்க நிகழ்ச்சியினை 28.07.2026 அன்று அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் காலை வணக்கக் கூட்டத்தின் போது நடத்திட தெரிவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில், இலக்கிய மன்றம், வினாடி–வினா மன்றம், சிறார் திரைப்பட மன்றம், கலை மற்றும் பண்பாட்டு மன்றம் (கலைத்திருவிழா) மற்றும் சுற்றுச்சூழல் மன்றம் போன்று பள்ளியளவில் செயல்படும் மன்றச் செயல்பாடுகளுக்கும் தனித்தனியாக ஒரு பொறுப்பாசிரியரையும், ஒவ்வொரு மன்றச் செயல்பாட்டிலும் சிறந்து விளங்கும் ஒரு மாணவரை அந்தந்த மன்றச் செயல்பாட்டிற்கான மாணவர் தூதுவராக (Student Ambassador) நியமித்தல் வேண்டும்.

மேலும், பின்வரும் நிகழிச்சி நிரலை பின்பற்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் இணைந்து மன்றச் செயல்பாடுகளின் துவக்க நிகழ்ச்சியினை 28.07.2026 அன்று திட்டமிட்டு மேற்கொள்ளுதல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.

## மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சி நிரல் – 28.07.2026

இந்நிகழிச்சிக்கு 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை உள்ள அனைத்து மாணவர்களையும் அவரவர் மகிழ் முற்றம் குழுக்களின் அடிப்படையில் 5 குழுக்களாக வரிசைப்படுத்தவும்.

| | |
|---|---|
| தலைமையாசிரியரின் வரவேற்புரை | 2026–27 ஆம் ஆண்டில் பள்ளியளவில் செயல்படும் அனைத்து மன்றச் செயல்பாடுகளின் துவக்கத்தினை அறிவித்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை எடுத்துரைத்தல்.<br>மன்றச் செயல்பாடுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளையின் நாள் மற்றும் நேர விவரங்களை அறிவித்தல் மற்றும் அதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தல். |
| மாணவ கல்வி அமைச்சர் | மன்றச் செயல்பாடுகள் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு (holistic development of students) எவ்வாறு வழிவகுக்கிறது என்பதை எடுத்துரைத்தல். |
| குழுத் தலைவர்கள் (House Captains) | ஒவ்வொரு மன்றச் செயல்பாடுகளுக்கான பொறுப்பு ஆசிரியர்கள் மற்றும் மாணவ தூதுவர்களை அறிமுகப்படுத்துதல். |
| ஒவ்வொரு மன்றப் பொறுப்பாசிரியர்கள் | மன்றப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை அங்கீகரித்தல். |
| ஒவ்வொரு மன்ற மாணவ தூதுவர்கள் | அந்தந்த மன்றச் செயல்பாடுகளில் அவர்கள் பெற்ற அனுபவங்களை பகிர்ந்து இனிவரும் காலங்களில் அனைத்து மாணவர்களின் பங்கேற்பினை ஊக்குவித்தல். |
| மகிழ்முற்றம் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் | மகிழ்முற்றம் ஆசிரியர் ஒருங்கிணைப்பாளர் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள உறுதிமொழியை வாசிக்க அனைவரும் உறுதிமொழி ஏற்றல். |
| வினாடி வினா மன்றப் பொறுப்பாசிரியர் | இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள வினாடி வினாவை மகிழ் முற்றம் குழுக்கள் வாரியாக நடத்துதல், மதிப்பெண் வழங்குதல் மற்றும் வெற்றி பெற்ற குழுவினை அறிவித்தல். |
| இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியர் | இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மாணவர்கள் முன்கூட்டியே தயார்செய்வதை உறுதி செய்தல். அப்படைப்புகளுக்கு குழு வாரியாக மதிப்பெண்கள் வழங்குதல். அவற்றை நிகழ்ச்சி அன்று காட்சிப்படுத்துதல். |
| சிறார் திரைப்பட மன்றப் பொறுப்பாசிரியர் | மாணவர்கள் இவ்வாண்டு காட்சிப்படுத்தப்பட்ட சிறார் திரைப்படத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பிடித்த கதாபாத்திரத்தினைப் பற்றி எழுதுதல், சுவரொட்டி தயாரித்தல், போன்று ஏதேனும் ஒரு செயல்பாட்டினை செய்து அவற்றை நிகழ்ச்சி அன்று காட்சிப்படுத்துதல். |

| | |
|---|---|
| சுற்றுச்சூழல் மன்றப் பொறுப்பாசிரியர் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு சார்ந்து ஏதேனும் செயல்பாட்டினை மாணவர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளுதல். |
| கலைப் பண்பாட்டு மன்றப் பொறுப்பாசிரியர் | சென்ற ஆண்டு பள்ளியளவில் கலைத்திருவிழா போட்டியில் சிறந்து விளங்கிய மாணவர்களைக் கொண்டு ஏதேனும் ஒரு கலைநிகழ்ச்சியினை திட்டமிட்டு நடத்துதல். |

இந்த துவக்க நிகழ்ச்சியினைத் தொடர்ந்து, அனைத்து அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் அனைத்து மன்றங்களும் முறையாக அமைக்கப்பட்டு வாரந்தோறும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாடவேளைகளில் மன்றச் செயல்பாடுகள் முறையாகவும், தொடர்ச்சியாகவும் நடைபெறுவதை அந்தந்த பள்ளி தலைமையாசிரியரும் மன்றப் பொறுப்பாசிரியர்களும் மாணவர் அமைச்சர்களும் மகிழ்முற்றம் குழு தலைவர்ககளும் உறுதி செய்தல் வேண்டும்.

மேலும், இவ்வாறாக பள்ளிகளில் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக முன்னெடுக்கப்படும் செயல்பாடுகள் அனைத்தும் மாணவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கவும், எதிர்கால சவால்களை எதிர்கொள்ளும் திறனைப் பெறவும் உறுதுணையாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே, இவ்வகையான அனைத்து செயல்பாடுகளிலும் ஒவ்வொரு மாணவரின் பங்கேற்பினை உறுதிசெய்யும் நோக்கில் அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் திட்டமிட்டு இந்நிகழ்வுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து தலைமையாசிரியர்களும் மற்றும் ஆசிரியர்களும் இப்பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி முழு கவனம் செலுத்தி முனைப்புடன் செயல்படுத்த தேவையான வழிகாட்டுதல்களை வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்புகள்**

1. மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சிற்கான வினாடி வினா
2. காட்சிப்படுத்த வேண்டிய இலக்கிய செயல்பாடுகள்,
3. மன்றச் செயல்பாடுகளுக்கான மாணவர் உறுதிமொழி

இயக்குநர்,

(கை) 14/07/26

பெறுநர்
மாவட்ட முதன்மைக் கல்வி அலுவர்கள், அனைத்து மாவட்டம்
நகல்
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி,
சென்னை– 6 (தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது)

# இணைப்பு – 1

## மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சி வினாடி வினா

வினாடி வினா மன்றப் பொறுப்பாசிரியர்கள் மகிழ் முற்றம் குழுக்கள் வாரியாக வினாடி வினாவை மேடையில் நடத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
ஒவ்வொரு மகிழ் முற்றம் குழுவும் 6 முதல் 9–ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களிலிருந்து ஒரு குழுவாகப் பங்கேற்க 2 மாணவர்களை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.
ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு கேள்வி வீதம் 6 சுற்றுகளுக்கு வினாடி வினாவை நடத்துங்கள் . சமநிலை ஏற்பட்டால், அதற்காக வழங்கப்பட்டுள்ள 2 Tie–breaker கேள்விகளைப் பயன்படுத்துங்கள்.

| எண் | கேள்வி | விருப்பம் A | விருப்பம் B | விருப்பம் C | விருப்பம் D | சரியான பதில் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ஜூலை 1 என்பது மேற்கு வங்கத்தின் முன்னாள் முதல்வரான மருத்துவர் பித்தான் சந்திர ராய் அவர்களின் பிறந்த தினமும் நினைவு தினமும் ஆகும். இந்தியாவில் இந்த நாள் எப்படிக் கொண்டாடப்படுகிறது? | பொறியாளர் தினம் | மருத்துவர் தினம் | மாணவர் தினம் | நாடாளுமன்ற தினம் | B – மருத்துவர் தினம் |
| 2 | இரத்தத்திற்குச் சிவப்பு நிறம் தருவதற்குக் காரணமான தனிமம் எது? | செம்பு | இரும்பு | கால்சியம் | கார்பன் | B – இரும்பு |
| 3 | 2018 முதல், ஜூலை 1 ஜி.எஸ்.டி. வரி பயன்பாட்டையும் குறிக்கிறது. ஜி.எஸ்.டி. என்பதன் முழு விரிவாக்கம் என்ன? | தங்கம் மற்றும் வெள்ளி வரி | அரசு சேவைகள் வரி | கிடங்கு மற்றும் சேமிப்பு வரி | சரக்கு மற்றும் சேவை வரி | D – சரக்கு மற்றும் சேவை வரி |
| 4 | 1955 ஜூலை 1 அன்று, நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் இம்பீரியல் பேங்க் ஆஃப் இந்தியா எந்த வங்கியாக மாறியது? | ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா | சென்ட்ரல் பேங்க் ஆஃப் இந்தியா | கனரா வங்கி | பேங்க் ஆஃப் பரோடா | A – ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா |
| 5 | 2026 ஜூலை 4 அன்று, சுதந்திரத்தின் 250 ஆண்டுகளை எந்த நாடு கொண்டாடுகிறது? | இந்தோனேஷியா | ஐக்கிய இராச்சியம் | அமெரிக்கா | ஆஸ்திரேலியா | C – அமெரிக்கா |
| 6 | கோக்கோ தாவரத்தின் கொட்டைகளிலிருந்து வணிக ரீதியாக முக்கியமான எந்தப் பொருளைப் பெறுகிறோம்? | தேநீர் | சாக்லேட் | காபி | சர்க்கரை | B – சாக்லேட் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 7 | ஜனவரி 2026 நிலவரப்படி, 1.46 பில்லியின் மக்கள்தொகையுடன், உலக மக்கள்தொகையில் 17.3% கொண்ட அதிக மக்கள்தொகையுடைய நாடு எது? | சீனா | ரஷ்யா | அமெரிக்கா | இந்தியா | D – இந்தியா |
| 8 | 17 வயதில் அமைதிக்கான நோபல் பரிசு வென்ற இளையவர் இவர்களில் யார்? | நாதியா முராத் | பராக் ஒபாமா | மலாலா யூசஃப்சாய் | நிஹோான் ஹிடாங்க்யோ | C – மலாலா யூசஃப்சாய் |
| 9 | நபார்டு (NABARD) வங்கி, இவற்றில் எந்தத் துறையின் வளர்ச்சிக்காகத் தொடங்கப்பட்டது? | விவசாயம் | மீன்பிடித்த ல் | கல்வி | போக்குவரத்து | A – விவசாயம் |
| 10 | ஜூலை 15, தமிழ்நாட்டின் எந்த முதலமைச்சரின் பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் 'கல்வி நாள்' ஆகக் கொண்டாடப்படுகிறது? | கே. கருணாநிதி | எம். ஜி. ராமச்சந்திர ன் | ஜெ. ஜெயலலிதா | கே. காமராஜர் | D – கே. காமராஜர் |
| 11 | இருளர் இன மக்கள் இவற்றில் எந்த உயிரினத்தைப் பிடிப்பதில் நிபுணர்கள்? | பாம்பு | யானை | நாய்கள் | முதலைகள் | A – பாம்பு |
| 12 | ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் எந்த நகரத்தில் அமைந்துள்ளது? | பாரிஸ் | புது டெல்லி | நியூயார்க் | லண்டன் | C – நியூயார்க் |
| 13 | தங்கள் நாட்டின் ஜனாதிபதியாக ஆவதற்கு முன்பு 27 ஆண்டுகள் சிறையிலிருந்தவர் யார்? | டொனால்ட் டிரம்ப் | நெல்சன் மண்டேலா | விளாடிமிர் புடின் | எம்மானுவேல் மக்ரோன் | B – நெல்சன் மண்டேலா |
| 14 | உலகின் மிகப்பெரிய மாங்க்ரோவ் காடு எந்த நீர்நிலையின் முகத்துவாரத்தில் காணப்படுகிறது? | அரேபியக் கடல் | வங்காள விரிகுடா | அட்லாண்டிக் பெருங்கடல் | இந்தியப் பெருங்கடல் | B – வங்காள விரிகுடா |
| 15 | அழிவின் விளிம்பில் உள்ள விலங்குகளைப் பாதுகாக்கும் WWF அமைப்பின் சின்னமாக உள்ள விலங்கு எது? | டோடோ | சிங்கம் | காண்டா மிருகம் | பாண்டா கரடி | D – பாண்டா கரடி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 16 | காட்டில் சிங்கம், புலி, சிறுத்தை ஆகிய மூன்றையும் பார்க்கக் கூடிய உலகின் ஒரே நாடு எது? | கென்யா | மலேசியா | இந்தியா | இலங்கை | C – இந்தியா |
| 17 | இந்தியாவின் முதல் செயற்கைக்கோளுக்குப் பெயர் சூட்டப்பட்ட, இந்தியாவின் முதல் காலத்து வானியலாளர்களில் ஒருவர் யார்? | ஆர்யபட்டர் | பாஸ்கரர் | சந்திரயான் | விக்ரம் | A – ஆர்யபட்டர் |
| 18 | ஆங்கில 'alphabet' என்ற சொல்லுக்குப் பெயர் கிடைத்த 'alpha' மற்றும் 'beta' என்ற எழுத்துகள் எந்தப் பண்டைய மொழியைச் சேர்ந்தவை? | லத்தீன் | சமஸ்கிருதம் | கிரேக்கம் | செல்டிக் | C – கிரேக்கம் |
| 19 | ஆரம்பப் பள்ளிக்குப் பயன்படுத்தப்படும் 'Kindergarten' என்ற சொல் எந்த மொழியிலிருந்து வந்தது? | பிரெஞ்சு | கிரேக்கம் | ஸ்பானிஷ் | ஜெர்மன் | D – ஜெர்மன் |
| 20 | இவற்றில் எந்த நதி இவ்வளவு பெரிதாக இருப்பதால் அதன் குறுக்கே பாலங்கள் கட்டப்படவில்லை? | அமேசான் | நைல் | கங்கை | டான்யூப் | A – அமேசான் |
| 21 | அலெக்சாண்டர் மகானுக்கு உலகைப் பற்றி கற்றுக் கொடுத்த ஆசிரியர் யார்? | பிதாகரஸ் | அரிஸ்டாட்டில் | ப்ளினி | பிளேட்டோ | B – அரிஸ்டாட்டில் |
| 22 | ஒரு காலத்தில் உலகின் மிகப்பெரிய நூலகமாக இருந்த அலெக்சாண்ட்ரியா நூலகம் எந்த நாட்டிலிருந்தது? | கிரீஸ் | இத்தாலி | இந்தியா | எகிப்து | D – எகிப்து |
| 23 | கிராஃபைட் என்பது கார்பனின் ஒரு வகை. அது உங்கள் பள்ளியில் உள்ள எந்தப் பொருளில் காணப்படுகிறது? | சாக் | ரப்பர் | பென்சில் | காலணி | C – பென்சில் |
| 24 | உலகின் மிக உயரமான முதல் நூறு மலைகளும் எந்த மலைத்தொடரைச் சேர்ந்தவை? | ஆண்டிஸ் | ராக்கீஸ் | ஆல்ப்ஸ் | இமயமலை | D – இமயமலை |
| 25 | இவற்றில் எது ஐம்புலன்களில் ஒன்றல்ல? | வலி | சுவை | தொடு உணர்வு | மணம் | A – வலி |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 26 | புவியீர்ப்பு விசையைப் பற்றி சர் ஐசக் நியூட்டன் சிந்திக்கத் தூண்டியதாகக் கூறப்படும் பழம் எது? | ஆப்பிள் | வாழைப்பழம் | பலாப்பழம் | எலுமிச்சை | A – ஆப்பிள் |
| 27 | இவற்றில் எது புதுப்பிக்க முடியாத ஆற்றல் மூலம்? | சூரியன் | அலைகள் | காற்று | எண்ணெய் | D – எண்ணெய் |
| 28 | தமிழ்நாட்டின் மாநிலப் பறவை எது? | மரகதப் புறா | மயில் | கிளி | கருங்கழுகு | A – மரகதப் புறா |
| 29 | இந்திய ரூபாய் நோட்டில் யாருடைய கையொப்பம் இருக்கும்? | இந்தியப் பிரதமர் | இந்தியக் குடியரசுத் தலைவர் | ரிசர்வ் வங்கி ஆளுநர் | இந்திய நிதி அமைச்சர் | C – ரிசர்வ் வங்கி ஆளுநர் |
| 30 | நீங்கள் 'ஸ்டெதஸ்கோப்' பயன்படுத்தினால், நோயாளியின் எதைச் சரிபார்க்கிறீர்கள்? | சுவாசம் | இரத்த அழுத்தம் | வெப்பநிலை | உயரம் | A – சுவாசம் |
| 31 | முதல் பூரண வர்க்க எண் எது? | 1 | 2 | 4 | 9 | A – 1 |
| 32 | இவற்றில் எது வானவிலின் நிறங்களில் ஒன்றல்ல? | ஆரஞ்சு | இண்டிகோ | இளஞ்சிவப்பு | ஊதா | C – இளஞ்சிவப்பு |

## இணைப்பு – 2

இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியர்கள் கீழ்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையை தகவல் மற்றும் விளம்பர மாணவ அமைச்சரிடம் பகிர வேண்டும். மாணவ அமைச்சர் இதனை மகிழ் முற்றம் குழுத் தலைவர்கள் மற்றும் குழுப் பொறுப்பாசிரியர்களிடம் பகிர வேண்டும்.

கீழ்கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மாணவர்கள் அவர்களின் படைப்புகளை உருவாக்குவதை அந்தந்த குழுப் பொறுப்பாசிரியர்கள் மற்றம் குழுத் தலைவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

இலக்கிய மன்றப் பொறுப்பாசிரியர்கள் மாணவர் படைப்புகளுக்கு குழு வாரியாக மதிப்பெண்கள் வழங்கி அவர்களின் படைப்புகளை மன்றச் செயல்பாடுகள் துவக்க நிகழ்ச்சி அன்று பள்ளியில் காட்சிப்படுத்தி, வெற்றி பெற்ற குழுவினை அறிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

| மகிழ் முற்றம் குழு (House) | மையக்கருத்து Theme | செயல்பாடு Activity |
|---|---|---|
| குறிஞ்சி | இளைஞர் திறன் மேம்பாடு<br>Youth Skill Development | கொடுக்கப்பட்டுள்ள மையக்கருத்தின் கீழ் இவற்றை உருவாக்கவும்:<br>1. வரைகதை உருவாக்குதல்<br>Comic creation<br>2. முழக்கம் எழுதுதல்<br>Slogan writing<br>3. சுவரொட்டி உருவாக்குதல்<br>Poster making |
| முல்லை | சதுரங்கத்தில் இந்தியா<br>India in Chess | |
| மருதம் | புலிகளைப் பாதுகாத்தல்<br>Tiger Conservation | |
| நெய்தல் | காடுகளின் முக்கியத்துவம்<br>Importance of Forests | |
| பாலை | நட்பின் மகத்துவம்<br>Importance of Friendship | |

## இணைப்பு – 3

### மன்றச் செயல்பாடுகளுக்கான மாணவர் உறுதிமொழி

நான் எனது தனித்திறமைகளை மேம்படுத்தும் வகையில், பள்ளியில் நடைபெறும் அனைத்து மன்றச் செயல்பாடுகளிலும் தவறாமல் பங்கேற்பேன் என்றும், ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தி, எனது கலை, அறிவியல், இலக்கியம், விளையாட்டு மற்றும் சமூக திறமைகளை வெளிப்படுத்த ஆர்வமுடன் செயல்படுவேன் என்றும் உறுதி ஏற்கிறேன்.

மேலும், தன்முனைப்புடன் குழுச்செயல்பாடுகளில் ஒற்றுமையுடன் ஈடுபட்டு அனைவரின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பேன் என்றும் உளமாற நான் உறுதி அளிக்கிறேன்.